1973 மார்ச் 22]

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, விரைவில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் அது நீட்டிக்கப்படும்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்திற்கான இடம்.

*470 வினா.—திரு சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் எந்த இடத்தில் டெலிவிஷன் அமைக்கப்படவுள்ளது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னையில் தொலைக் காட்சி நிலையம் பழைய ஆடம்ஸ் சாலையில் தெற்கு புறத்தில் லாக் நக ருக்கு சமீபத்தில் உள்ள இடத்தில் அமைக்கப்பட இருக்கிறது. இவ்விடம் சட்டமன்ற உறுப்பினர்களின் புதிய விடுதிக்கு ஒரு பர்லாங்கு கிழக்குப் புற மாக உள்ளது.

திரு மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, அயல் நாடுகளில் உள்ளதுபோல், தனியார் துறையில் (டெலிவிஷன்) தொலைக்காட்சி நிலையம் அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : தனியார் துறையை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வில்லை.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, அமைக்கப்படவிருக் கின்ற டெலிவிஷன் 25 மைல், 30 மைல் அளவுக்குத்தான் பயன்படும். அதைகடலோரத்தில் அமைத்தால் அதன் உபயோகம் சென்னைக்கே ஆகி விடும். ஆகவே அதை சென்னைக்கு மேற்குப் பக்கத்தில் காஞ்சிபுரத்தில் அமைத்தால் அது மிகவும் உபயோகமாக இருக்கும். மேற்குப்பகுதியில் வைக்க மாநில அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய அரசாங்கம் இடத்தை முடிவு செய்து கட்டடம் கட்ட ஆரம்பித்து, 1973-ம் ஆண்டிற்குள் கட்டடம் முடிந்துவிடும் தருவாயில் இருக்கிறது. மறு பரிசீலனை செய் வதற்கு இடமில்லை.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைக்க இருக்கிற டெலிவிஷன் நிலையத்திற்கு ஆகும் செலவு விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர் கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கட்டட வேலைக்காக ரூ. 37 லட்சம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற இயந்திர சாதனங்களைப் பற்றித் தனியாக மத்திய அரசைத்தான் கேட்க வேண்டும்.

திரு எம். சுரேந்திரன் : சார், இந்த டெலிவிஷன் அமைப்பது ஒரு குறிப்பிட்ட ஊர் வரையிலும் தான் அது பிரயோசனப்படும் என்று சொன்

னார்கள். அது மாநிலம் முழுவதற்கும் பயன் அளிக்கும் வகையில் இன்னும் எங்கெங்கே டெலிவிஷன் அமைக்க வேண்டுமோ அங்கெல்லாம் அதை அதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இந்த டெலிவிஷன் நிலையம் கட்டி முடிக்கட்டும். பிறகு அதைப்பற்றி பார்த்துக் கொள்ளலாம். இப்போது இருக்கும் திட்டம் நிறைவேறினால் நம்முடைய மாநிலத்தில் கூடுமான வரை மிகுந்த அளவுக்கு டெலிவிஷன் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் நல்ல காட்சிகளைக் காணலாம் என்று எதிர், பார்க்கப்படுகிறது.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த டெலிவிஷன் நிலையம் சென்னைக்கு மட்டும்தானா திருச்சி, மதுரை போன்ற நகரங்களிலும் அமைக்கப்படுமா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (நா. வீராசாமி) : இது ஏற்கெனவே அவர் கேட்ட கேள்வி.

திரு எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, நல்ல காட்சிகளைக் காணலாம் என்று சொன்னார்கள். அது என்ன காட்சி என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு ஆறுமுகம் விரும்புகிற நல்ல காட்சிகளை எல்லாம் காணலாம்.

திரு கே. கந்தசாமி : தலைவரவர்களே, இந்தத் தொலைக்காட்சி நிலையத்தின் பயன் அரசுக்கு மட்டும்தானா அல்லது தனிப்பட்டவர்களுக்கும் உண்டா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்தப்பயன் உண்டு.

திரு எம். சுரேந்திரன் : அந்த நல்ல காட்சிகளையெல்லாம் சட்டசபை உறுப்பினர்களும் பார்ப்பதற்கான வசதி செய்து தரப்படுமா ? ஹாஸ்டலில் அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : அது ஒரு நல்ல கருத்து.

திரு எம். தேவராசன் : தலைவரவர்களே, கிண்டி குதிரைப்பந்தய மைதானத்தில் டெலிவிஷன் காட்சி காட்டப்படுகிறது. அதற்கும் இப்போது புதிதாக அமைக்க இருக்கும் டெலிவிஷனுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? ஏற்கெனவே அங்கே அவர்கள் எப்படி அமைத்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிண்டியிலே காட்டப்படுகிற டெலிவிஷன் காட்சியைப் பார்த்துவிட்டு பணம் கட்டியவர்கள் சிலபேர் பதைபதைப்பார்கள். இந்தக் காட்சியை பார்த்துவிட்டு பதைபதைக்க வேண்டிய அவசியம் இல்லை.

1973 மார்ச் 22]

திரு கே. எ. வகாப் : தலைவரவர்களே, அமைக்கப்படவிருக்கிற டெலிவிஷன் நிலையம் எத்தனை மாடிக்கட்டிடத்தில் இருக்கும்? அந்த நிலையத்திற்குப் போக மீதியுள்ள மாடிகளில்—அயல் நாடுகளில் அரசாங்க அலுவலகங்களை வைத்திருக்கிறார்கள்—அரசாங்க அலுவலகங்களைவைக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் நாம் 5 ஏக்கர் நிலம் கொடுத்து இருக்கிறோம். மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் மூலமாக இது கட்டப்படுகிறது. முழு பொறுப்பும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது.

திரு ஆ. பரந்தாமன் : வெளிநாடுகளிலே கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை எல்லாம் டெலிவிஷனில் பார்க்கிறார்கள். அப்படிப்பட்ட வசதிகள் சென்னையிலும் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படிப்பட்ட வசதிகள் வரும் என்றுதான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

திரு ரா. ரா. முனுசாமி : டில்லியில் டெலிவிஷன் காட்சியை தமிழ் நாடு ஹவுசிலும், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் சென்னை சட்டமன்ற விடுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கக்கூடிய அளவுக்கு வசதி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் டில்லியில் தமிழ்நாடு ஹவுசில் ஏற்பாடு இருக்கிறது. நாம் ஏற்கனவே நல்ல யோசனை என்று சொன்னேன். பேரவை முன்னவருடைய முயற்சியில் நிறைவேற்றப்பட வேண்டும்,

கும்முடிப்பூண்டியில் எடுக்கப்பட்டுள்ள திட்ட வேலைகள்.

"471—வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) 1972-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் அன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கும்முடிப்பூண்டித் தொகுதியில் நேரில் பார்வையிட்ட திட்டங்கள் என்னென்ன ?

(ஆ) இவற்றில் எந்தெந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன?

மாண்புமிகு திரு எஸ். ஜே சாதிக் பாட்சா :—(அ) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வேலைகளை 29—2—72-ல் பார்வையிட்டார்கள் :—

I. பொன்னேரி தாலுக்கா :

1. அன்னப்ப நாயக்கன் அணைக்கட்டிலிருந்து கும்முடிப்பூண்டி ஈசா ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம். ....